# TNPSC GROUP I / II - PRELIMINARY - 2022

# INDIAN POLITY - WORKSHEET

## குடியுரிமை

- மற்ற நவீன அரசுகளைப்போல இந்தியாவிலும் மக்களை இருவகைப்படுத்தலாம். இந்தியாவில் குடியுரிமை பெற்றவர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள்.
- இந்திய குடியுரிமை பெற்றவர்கள் அனைத்து அரசுரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளை பெறுகின்றனர். வெளிநாட்டவர் (அந்நியர்), மற்ற நாடுகளின் குடிமக்கள் ஆதலால், அனைத்து குடிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பெற இயலாது. மேலும் அந்நியர்களை இருவகைப்படுத்தலாம் - நட்பின அந்நியர் மற்றும் எதிரி அந்நியர் இந்தியாவுடன் நட்புறவு கொண்ட நாடுகளின் குடிமக்கள் நட்பின அந்நியர் ஆவர். இந்தியாவுடன் போர்ச்சுழல் கொண்ட நாடுகளின் குடிமக்கள் எதிரி அந்நியர். அவர்களால் கைது மற்றும் தடுப்புக் காவலிலிருந்து பாதுகாக்கும் உரிமையை (சரத்து 22) பெற இயலாது.

- அரசியலமைப்பு பின்வரும் உரிமைகளை இந்திய குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டும் வழங்குகிறது. (இந்த உரிமை வெளிநாட்டவருக்கு இல்லை).

    1. சரத்து 15 – மதம், ஜாதி, இனம், பாலினம் மற்றும் பிறந்த இடத்தின் பெயரால் பாகுபடுத்த முடியாது
    2. சரத்து 16 – அரசு வேலைவாய்ப்புகளில் அனைவருக்கும் சம உரிமை.
    3. சரத்து 19 – பேச்சுரிமை, கருத்துரிமை, சபை, கூட்டமைப்பு, இயக்கம், குடியிருப்பு மற்றும் தொழில் சுதந்திரம்.
    4. சரத்து 29 மற்றும் 39 – கல்வி மற்றும் பண்பாட்டு உரிமைகள்.
    5. மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் வாக்களிக்கும் உரிமை.
    6. பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைக்கு உறுப்பினராக போட்டியிடும் உரிமை.
    7. குறிப்பிட்ட பொது அலுவலகங்களில் பங்கு பெற தகுதி. அதாவது இந்திய ஜனாதிபதி இந்திய துணை ஜனாதிபதி மாநில கவர்னர், உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி, இந்தியாவின் தலைமை அரசாங்க வழக்கறிஞர், மாநிலத்தின் தலைமை அரசாங்க வழக்கறிஞர்.

- இந்தியாவில் இந்திய குடியுரிமையை பிறப்பு மட்டுமல்லாமல் அயல்நாட்டவராக இருந்து விண்ணப்பித்து குடியுரிமையை பெற்றவர்களும் இந்திய ஜனாதிபதி ஆவதற்கு தகுதியானவர்கள்.

- ஆனால் அமெரிக்காவில் பிறப்பினால் குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமே ஜனாதிபதியாக தகுதி பெற்றவர்கள்.

**அரசியலமைப்பு விதிகள் :**

- இந்திய அரசியலமைப்பு சரத்து 5 லிருந்து 11வரை குறிப்பிடப்பட்டுள்ள குடியுரிமையில் உள்ளவை நிலையானவையும் அல்ல, விரிவான தகவலும் அல்ல.
- இவை (1950 ஜனவரி 26)இல் வாழ்ந்த நபர்களின் குடியுரிமை பற்றி மட்டுமே விளக்குகிறது.
- இதில் குடியுரிமையை பெறுதல் மற்றும் இழத்தல் பற்றி குறிப்பிடப்படவில்லை.
- இவை பாராளுமன்றத்திற்கு குடியரிமை தொடர்பான சட்டங்களை இயற்ற அதிகாரம் வழங்குகிறது.
- இதன் படி பாராளுமன்றம் குடியுரிமை சட்டம் 1955 கொண்டுவந்தது.

**குடியுரிமையை பெறுதல்: அரசியலமைப்பின்படி கீழ்க்கண்ட நான்கு விதங்களில் இந்திய குடியுரிமை பெறமுடியும். (1950 ஜனவரி 26ல்)**

**சரத்து 5:**

- இந்தியாவில் நிரந்தரமாக இருப்பவர் அல்லது கீழ்கண்ட மூன்றில் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்பவர் இந்திய குடியுரிமை பெறலாம்.
- இந்தியாவில் பிறந்தவராவோ அல்லது அவருடைய பெற்றோர்கள் இந்தியாவில் பிறந்தவராகவோ அல்லது அரசியலமைப்பு அமலுக்கு வரும் முன் 5 வருடங்கள் இந்தியாவில் குடியிருந்தவராக இருக்க வேண்டும்

**சரத்து 6**

- பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்தவர்கள் அல்லது அவருடைய பெற்றோர் அல்லது அவர்களுடைய மூதாதையர் (தாத்தா, பாட்டி) பிரிக்கப்படாத இந்தியாவில் வாழ்ந்தவர்களாகவும் மற்றும் பின்வரும் இரு நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை பூர்த்தி செய்பவராகவோ இருக்க வேண்டும். அவை
- 1948ல் ஜூலை 19க்கு முன்பு இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வசிப்பவராக அல்லது 1948ல் ஜூலை 19க்கு பின்பு இந்தியாவிற்கு குடிபெயர்ந்து இந்திய குடியுரிமைக்காக பதிவு செய்திருக்க வேண்டும். (பெர்மிட் முறை)
- குடியுரிமை பதிவிற்காக விண்ணப்பம் செய்வதற்கு முன்பாக அந்த நபர் 6 மாதங்கள் இந்தியாவில் வசித்திருக்க வேண்டும்.

**சரத்து 7**

- ◊ 1947 மார்ச் 1க்கு பிறகு பாகிஸ்தானுக்கு இடம் பெயர்ந்து பின்பு இந்தியாவில் மீண்டும் குடியேற்றம் அடைந்து இந்திய குடியுரிமை பெறலாம்
- ◊ குடியுரிமை பதிவிற்காக விண்ணப்பம் செய்வதற்கு முன்பாக அந்த நபர் 6 மாதங்கள் இந்தியாவில் வசித்திருக்க வேண்டும்.

**சரத்து 8:**

- ◊ ஒரு நபர் அவரது பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி பிரிக்கப்படாத இந்தியாவில் பிறந்தவராகவும், ஆனால் இந்தியாவிற்கு வெளியே வசிப்பவராகவும் இருந்தால் இவர்கள் இந்திய குடியுரிமை பெற தாங்கள் வசித்திருக்கும் நாட்டின் இந்திய தூதராக அதிகாரியால் பதிவு செய்து கொள்ளலாம். எனவே இந்த விதி வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு பொருந்தும்.

♣ குடியுரிமை சம்மந்தமான மற்ற அரசியலமைப்பு விதிகள்

- ♦ **சரத்து (9):** எந்தவொரு நபர் வெளிநாட்டின் குடியுரிமையை தானாகவே பெற்றுவிட்டார் எனில் அந்த நபர் இந்திய குடிமகனாக கருதப்படமாட்டார்.
- ♦ **சரத்து (10):** பாராளுமன்றத்தால் கொண்டு வரப்பட்ட சட்ட விதிமுறைக்கு உட்பட்டு ஒரு நபர் இந்திய குடிமகனாகும் உரிமையை தொடரலாம்.
- ♦ **சரத்து (11):** குடியுரிமை பொருத்தமட்டில் அவற்றை அளிக்கவும், இழக்க செய்யவும், குடியுரிமை தொடர்பான அனைத்தையும் மாற்ற பாராளுமன்றத்திற்கு உரிமை உள்ளது.

## குடியுரிமை சட்டம் 1955 (Citizenship Act, 1955)

- ◊ அரசியலமைப்பு அமலாக்கத்திற்கு பிறகு குடியுரிமை சட்டம் 1955, குடியுரிமையை இழப்பது அல்லது பெறுவது தொடர்பானவற்றை விளக்குகிறது. இவற்றில்
- ◊ பின்வரும் பல சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.
  1. குடியுரிமை (திருத்த) சட்டம் 1986
  2. குடியுரிமை (திருத்த) சட்டம் 1992
  3. குடியுரிமை (திருத்த) சட்டம் 2003
  4. குடியுரிமை (திருத்த) சட்டம் 2005
  5. குடியுரிமை (திருத்த) சட்டம் 2009
  6. குடியுரிமை (திருத்த) சட்டம் 2015
  7. குடியுரிமை (திருத்த) சட்டம் 2016

- ◊ குடியுரிமை சட்டம் 1955 காமன்வெல்த் குடியுரிமையையும் வழங்கியது. 2003ல் கொண்டு வரப்பட்ட குடியுரிமை திருத்தச்சட்டத்தால் நீக்கப்பட்டது.

## குடியுரிமை பெறுதல் (Acquisition Citizenship)

- ◊ 1955ல் கொண்டு வரப்பட்ட குடியுரிமை சட்டம் பின்வரும் அடிப்படையில் ஒர நபருக்கு குடியுரிமையை வழங்குகிறது.

APPOLO STUDY CENTRE

**1955 குடியுரிமை சட்டம் 5 வகைகளில் குடியுரிமை பெறுவதை கூறுகிறது**

- பிறப்பு
- வம்சாவளி
- பதிவு செய்தல்
- அயல்நாட்டவர் குடியுரிமை கோரல்
- மாகாணங்கள் இணைக்கப்படுதல்

**பிறப்புவழிக் குடியுரிமை**

- **1950 ஜனவரி 26ஆம்** தேதியன்றோ அதற்கு பின்போ மற்றும் 1987 ஜுலை 1க்கு முன்பு இந்தியாவில் பிறந்த ஒருவர் இந்தியக் குடியுரிமை பெறலாம். 1987 ஜுலை 1ஆம் தேதியன்றோ அதற்கு பிறகோ இந்தியாவில் பிறந்தவரின் பெற்றோர்களில் ஒருவர் இந்திய குடிமகனாக இருந்தால் மட்டுமே குடியுரிமை பெற முடியும். மேலும், 2004 டிசம்பர் 3ஆம் தேதியன்றோ அல்லது பிறகோ இந்தியாவில் பிறந்த ஒருவர், அவரது பெற்றோர் இருவருமே இந்திய குடிமக்களாக இருந்தாலோ அல்லது ஒருவர் குடிமகனாகவும் மற்றொருவர் சட்டவிரோதமாக குடியேறியவராக இல்லாமலும் இருந்தால் மட்டுமே குடியுரிமை பெற இயலும்.

**மரபுவழிக் குடியுரிமை (வம்சாவளி)**

- **1950 ஜனவரி 26** அன்று அல்லது அதன் பிறகு மற்றும் 1992 டிசம்பர் 10ற்கு முன்பு பிறந்த ஒருவரின் தந்தை இந்திய குடிமகனாக இருந்தால், அவர் வம்சாவளி குடியுரிமையைப் பெறலாம்.
- **1992 டிசம்பர் 10**ஆம் தேதி அல்லது அதன் பிறகு ஒன்றுபட்ட இந்தியாவுக்கு வெளியே பிறந்தவரின் பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருந்தாலோ அல்லது இந்த தேதியில் குடிமகனாகக் கருதக் கூடிய தகுதி பெற்றிருந்தாலோ மரபுவழிக் குடியுரிமையைப் பெறலாம்.
- **2004 டிசம்பர் 3** முதல், வெளிநாட்டு இந்திய தூதரகத்தில் ஓராண்டுக்குள் பிறப்பினைப் பதிவு செய்யாவிட்டால், (மத்திய அரசின் முன் அனுமதி பெற்றால் ஒழிய) வம்சாவளி குடியுரிமை வழங்கப்படாது,

**பதிவு மூலம் குடியுரிமை**

- இந்தியாவில் பதிவு மூலம் குடியுரிமையை, பின்வருவனவற்றின் அடிப்படையில் பெறலாம்

a. இந்திய வம்சாவளியைப் கொண்ட ஒருவர், பதிவு மூலம் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டு இந்தியாவில் வசிப்பவர்.
b. இந்திய வம்சாவளியைக் கொண்டு பிரிக்கப்படாத இந்திய எல்லைக்கு வெளியில் வசிப்பவர்
c. இந்திய குடிமகன் / மகளைத் திருமணம் செய்து குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசிப்பவர்.

**அயல்நாட்டவருக்கு குடியுரிமை**

மத்திய அரசால், எந்தவொரு அயல்நாட்டவருக்கும் விண்ணப்பத்தின் அடிப்படையில் குடியுரிமை வழங்க அதிகாரம் உள்ளது. (அந்நபர் சட்டவிரோதமாக குடியேறாமல் இருக்கும் பட்சத்தில்) அதற்கான தகுதிகள்.

a. இந்தியக் குடியுரிமை பெற தகுதியற்ற நாடு என இந்தியாவால் அறிவிக்கப்படாத நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல்.
b. தன் தாய்நாட்டின் குடியுரிமையை துறந்தவராக இருத்தல்.
c. இந்திய அரசாங்க பணியில் இருத்தல் அல்லது குறைந்தது ஓர் ஆண்டாவது இந்தியாவில் வாழ்ந்து இருத்தல் (மனு செய்யும் ஆண்டிற்கு முந்தைய ஆண்டு), நல்ல பண்புடையவராக இருத்தல்.
d. எட்டாவது அட்டவணை மொழிகளில் ஏதேனும் ஒன்றை அறிந்திருத்தல், குடியுரிமைச் சான்று வழங்கப்படும் பட்சத்தில் தொடர்ந்து இந்தியாவில் குடியிருக்க ஒப்புதல் அளித்தல் ஆகியவையே அந்த நிபந்தனைகள்.
e. அறிவியல், தத்துவம், கலை, இலக்கியம், உலக அமைதி அல்லது மனித முன்னேற்றம் ஆகியவற்றில் சேவை புரிந்த நபர்களுக்கு மேற்கண்ட எந்த தகுதிகளும் இல்லையெனினும் இந்திய அரசு குடியுரிமை வழங்கலாம்.

❖ **குறிப்பு**

- அன்னை தெரசாவிற்கு **இயல்பூட்டுதல்** மூலம் இந்திய அரசு குடியுரிமை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

**இணைப்பு மூலம் குடியுரிமை**

- பிற நாடுகளின் பகுதிகள் இந்தியாவில் இணையும்போது, அப்பகுதியில் வாழும் மக்கள் இந்திய குடியுரிமை பெறலாம்.
- கோவா, டையூ, டாமன் பகுதிகள் போர்ச்சுகீசியர்களிடமிருந்தும், பாண்டிச்சேரி (குடியுரிமை (பாண்டிச்சேரி) உத்தரவு, 1962) பிரெஞ்சுக்காரர்களிடமிருந்தும் பெறப்பட்டு இந்தியாவுடன் இணைக்கப்பட்ட போது அங்கிருந்த மக்கள் குடியுரிமைச் சட்டம், 1955இன் படி இந்தியக் குடிமக்களாயினர்.

**குடியுரிமை இழப்பு (Loss of Citizenship)**

| துறத்தல் (By Renunciation) | முடிவுக்கு கொண்டுவருதல் (By Termination) | பறித்தல் (By Deprivation) |
|---|---|---|

1. முழு வயது அடைந்த இந்திய குடியுரிமை பெற்ற எவரும் இந்திய குடியுரிமையை துறக்கலாம். இதன் படி பதிவு செய்யும் போது அந்த நபரின் குடியுரிமை நிறுத்தப்படும். எனினும் போர் காலத்தில் இந்த பதிவு மத்திய அரசினால் நிறுத்தி வைக்கப்படும். இந்திய குடியுரிமையை துறந்தவரின் 18 வயது நிரம்பாத குழந்தைகளும் குடியுரிமையை இழப்பர். எனினும் 18 வயது நிரம்பியதும் அந்த குழந்தை இந்திய குடியுரிமையை பெறலாம்.

2. இந்திய குடியுரிமை பெற்றவர் தாமாகவே முழு உணர்வுடன் / தெரிந்தோ / கட்டாயத்தின் பெயரில் அல்லாமல் மற்ற நாட்டின் குடியுரிமையை பெறும் போது அவருடைய குடியுரிமை முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. எனினும், இந்திய போரில் ஈடுபடும் போது இவை நிறுத்தி வைக்கப்படும்.

3. மத்திய அரசால் பின்வரும் வகையில் குடியுரிமை பறிக்கப்படுகிறது.
    1. ஒரு நபர் போலியாக குடியுரிமை பெற்றிருந்தால்
    2. இந்திய அரசியலமைப்புக்கு உண்மையான விசுவாசமாக இல்லை என்றால்.
    3. போரின் போது எதிரி நாட்டிடம் சட்டவிரோதமாக வணிகமோ அல்லது தகவல் தொடர்போ கொண்டிருந்தால்,
    4. பதிவு முறையில் இந்திய குடியுரிமை பெற்று ஐந்து வருடங்களுக்குள் ஏதாவது ஒரு நாட்டில் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றால்
    5. இந்திய குடியுரிமை பெற்றவர் வெளி நாட்டில் தொடர்ச்சியாக ஏழு வருடங்கள் வசித்தால் (மாணவர்கள் / அரசு பணிகள் தவிர) அவர்களுடைய குடியுரிமை பறிக்கப்படும்

## ஒற்றை குடியுரிமை (Single Citizenship)

- கனடா பாராளுமன்றத்தை போன்று இந்தியாவிலும் ஒற்றை குடியுரிமை அறிமுகப் படுத்தப்பட்டு இந்திய மக்களின் சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் சம உரிமை (சில செயல்கள் தவிர) தரப்படுகிறது.

## வெளிநாடு வாழ் இந்தியரின் குடியுரிமை

செப்டம்பர் 2000-ல் இந்திய அரசு (வெளியுறவு அமைச்சகம்) - இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தோருக்கான உயர்மட்ட குழு எல்.எம். சிங்வி தலைமையில் அமைத்தது.

அந்தக் குழு ஜனவரி 2002-ல் தனது அறிக்கையைச் சமர்பித்தது. குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த இந்திய வம்சாவளி நபர்களுக்கு (PIO'S) இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கான குடியுரிமைச் சட்டம், 1955-ல் திருத்தம் செய்ய பரிந்துரைத்தது.

அதன்படி, குடியுரிமைச் (திருத்தம்) சட்டம் 2003-ல் பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசம் தவிர குறிப்பிட்ட 16 நாடுகளுக்கு வெளிநாடுவாழ் இந்திய குடியுரிமை (OCI) பெறுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது அனைத்து விதிகளையும் புறக்கணித்து முதன்மைச் சட்டத்தில் இருந்து காமன்வெல்த் குடியுரிமையை அங்கீகரிக்கிறது (அ) தொடர்புறுத்துகிறது.

குடியுரிமைச் (திருத்தம்) சட்டம் 2005-ன் படி, பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் தவிர அனைத்து நாடுகளின் PIO – களுக்கு அந்த நாடுகளின் உள்ளூர் சட்டங்களின் கீழ் இரட்டை குடியுரிமையும் இருக்கும் என நோக்கத்தை விரிவுப்படுத்தியுள்ளது.

இங்கே கவனிக்கத்தக்கது, இந்திய அரசிய அமைப்பில் (சரத்து 9) - இரட்டை குடியுரிமையை வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு தடை செய்கிறது.

குடியுரிமை (திருத்தம்) சட்டம் 2015, மீண்டும் OCI- லிருந்து முதன்மைச் சட்ட விதிகளை மாற்றியமைத்துள்ளது.

PIO அட்டை திட்டத்தையும் OCI அட்டை திட்டத்தையும் இணைத்து "Overseas Citizen of India Cardholder" என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

PIO அட்டைத் திட்டம் 19.08.2002 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது, அதன் பிறகு OCI அட்டைத் திட்டம் 01.12.2005 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

விண்ணப்பதாரர்கள் எதிர்கொள்ளும் சில சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மேம்பட்ட வசதிகளை வழங்குவதற்காக, இந்திய அரசு PIO (மற்றும்) OCI திட்டங்களை இணைத்து ஒரே திட்டத்தை உருவாக்க முடிவு செய்தது.

எனவே, இந்த நோக்கத்தை அடைவதற்காக குடியுரிமை (திருத்தம்) சட்டம், 2015-ஆனது இயற்றப்பட்டது. தற்போதுள்ள PIO அட்டைகாரர்களும் OCI அட்டைதாரர்களாக 09.01.2015 முதல் கருதப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

குடியுரிமை (திருத்தம்) சட்டம் 2015-ன் படி, ''வெளிநாடு வாழ் இந்திய குடிமகன்'' என்ற பெயருக்கு பதில் ''வெளிநாடு வாழ் இந்தியக் குடிமகன் அட்டைதாரர்'' என்று மாற்றப்பட்டது.

**குடியுரிமை திருத்தச் சட்டம் 2019**

- இம்மசோதா, 1955 ஆம் ஆண்டில் இந்திய குடியுரிமைச் சட்டத்தை திருத்த முற்படுகிறது மற்றும் மத ரீதியாக துன்புறுத்தப்பட்டு தப்பிப்பதற்கு டிசம்பர் 31, 2014 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்தியாவிற்குள் நுழைந்த பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளிலிருந்து வந்த 6 சிறுபான்மையினருக்காக இந்திய குடியுரிமையை வழங்குவதாகும்.
- மூன்று முகமதிய பெரும்பான்மை நாடுகளுக்கு சொந்தமான மற்றும் குறிப்பிட்ட நாட்களுக்குள் இந்தியாவிற்குள் நுழைந்தவர்கள் இந்திய குடியுரிமைப்பெற தகுதியுடைய ஆறு சிறுபான்மையினர்கள் இந்து, சீக், கிறிஸ்தவர், பார்சி, ஜெயின் மற்றும் புத்த மதத்தினர் ஆவர்.
- இந்த மசோதா 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைச்சட்டத்தின் பிரிவு 2 (1) (b) ல் ஒரு அம்சத்தை உள்ளடக்குகிறது. அதாவது, பாஸ்போட் (Entry into India) சட்டம் 1920 மற்றும் வெளிநாட்டினர் சட்டம் 1946 ஆகியவற்றின் கீழ் சட்டத்திற்கு புறம்பாக இந்திய நாட்டிற்குள் வந்தோர் என்பதற்கு மத்திய அரசால் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த மசோதா, இந்த பிரிவின்கீழ் நிலுவையிலுள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெற்று அவர்களைப் பாதுகாக்கவும் முன்மொழிகிறது.

**பதிவு முறையில் குடியுரிமை**

1. இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் பதிவு செய்தல் அல்லது அயல்நாட்டவருக்கு குடியுரிமை வழங்குதல் முறையில் குடியுரிமை வழங்கப்படுகிறது.
2. தற்போது, ஒருவர் இந்திய குடியுரிமையைப் பெறவேண்டுமென்றால் குறைந்தது 11 வருடங்கள் அவர் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

3. இப்புதிய மசோதா, இவ்வித 6 சிறுபான்மையின மக்கள் ஆறு வருடத்திற்குள் இந்தியாவில் தங்கியிருந்தாலும் அவர்களுக்கு குடியுரிமை வழங்க வழிவகுக்கிறது.

**குடியரிமை வழங்கப்படல்**

- இந்த சட்டத்தின் மூலம் குடியுரிமை பெற்றவர்கள் இந்தியாவிற்குள் வந்த நாள் முதல் இந்திய குடிமக்களாக கருதப்படுபவர்
- அவர்களது சட்டவிரோத குடியிருப்பு அல்லது குடியுரிமை சார்ந்த அனைத்து சட்ட நடவடிக்கைகளும் விலக்கிக்கொள்ளப்படும்.

**விலக்களிக்கப்பட்ட பகுதிகள்**

- இருப்பினும் அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையின்கீழ் வரும் அஸ்ஸாம், மேகாலயா, மிசோராம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களின் பழங்குடியினர் பகுதிகளை இறுதி வரைவு தவிர்க்கிறது. அதேபோல, உட்புற வரிசை அனுமதி (Inner line Permit) நடைமுறையிலுள்ள அருணாச்சல பிரதேசம், மிசோராம் மற்றும் நாகலாந்து ஆகிய மூன்று மாநிலங்களிலுள்ள பழங்குடியினர் பகுதிகளையும் இறுதிவரைவு தவிர்க்கிறது.
- மற்ற மாநிலங்களிலுள்ள குடிமக்கள் அருணாச்சல பிரதேசம், மிசோராம் மற்றும் நாகலாந்து ஆகிய மூன்று மாநிலங்களைப் பார்வையிடுவதற்கு ILP தேவைப்படுகிறது. Bengal Eastern Frontier Regulation, 1873 ன் படி, இந்த ILP உருவாக்கப்பட்டது.

**வெளிநாடு வாழ் இந்திய அட்டைதாரர் (OCI)**

சட்டத்தின்படி குறிப்பிட்ட சில காரணங்களுக்காக மத்திய அரசு வெளிநாட்டு வாழ் இந்திய அட்டைதாரரின் பதிவை ரத்து செய்ய இயலும்.

அவை

1. அந்த நபர் OCI பதிவை சட்டவிரோதமாக பெற்றிருந்தால்
2. பதிவு செய்து நைந்து வருடங்களுக்குள், இரண்டு வருட சிறை தண்டனைப் பெற்றிருந்தால்
3. இந்திய இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்தால்
4. மேலும் மத்திய அரசின் எந்த ஒரு சட்டத்தை மீறும்போதும் அவர்களின் OCI பதிவு ரத்து செய்யப்படலாம்.

   OCI ரத்து செய்யப்படுபவர்களின் நியாயத்தை கேட்கும் வாய்ப்பை அளிக்காமல், OCI ரத்து செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்படக்கூடாது.

# NRI / PIO / OCI

| வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) | இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் (PIO) | இந்தியாவின் வெளிநாட்டு குடியுரிமை (OCI) அட்டை கொண்டவர் |
|---|---|---|
| ஒரு இந்திய குடிமகன் பொதுவாக இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் மற்றும் இந்திய பாஸ்போர்ட் வைத்திருப்பவர் | ஒரு நபர் அல்லது ஒருவருடைய மூதாதையர் இந்திய நாட்டை சேர்ந்தவர் மற்றும் தற்போது வேறொரு நாட்டின் குடியுரிமை அல்லது நாட்டுரிமையை வைத்திருப்பவர் (அதாவது அவள் அல்லது அவர் வெளிநாட்டு பாஸ்போர்ட் வைத்திருப்பவர்) | குடியுரிமை சட்டம் 1955இன் படி இந்திய வெளிநாட்டு குடிமகன் அட்டைதாரராக பதிவு செய்யப்பட்ட ஒருவர் |

 PH: 24339436, 42867555, 9840226187